


நாமக்கல்லில் சட்டமன்ற பொதுத்தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ள வருகை தந்த கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (16.4.2026) தமிழ்நாடு பழங்குடி மக்கள் நல முன்னேற்ற சங்க தலைவர் தங்கராஜ் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, பழங்குடியின மக்களின் நல்வாழ்விற்காக கழக அரசு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தியமைக்காக நன்றி தெரிவித்து, கழக கூட்டணிக்கு தங்கள் ஆதரவினை தெரிவித்தனர். உடன் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஆர்.என். ராஜேஷ்குமார் உள்ளார்.



நாமக்கல்லில் சட்டமன்ற பொதுத்தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ள வருகை தந்த கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (16.4.2026) தமிழ்நாடு கோழிப்பண்ணை சங்கத் தலைவர் சிங்கராஜ் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, தொழில் மற்றும் வர்த்தகத் துறையின் மேம்பாட்டிற்காக கழக அரசு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தியமைக்காக நன்றி தெரிவித்து, கழக கூட்டணிக்கு தங்கள் ஆதரவினை தெரிவித்தனர். உடன் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஆர்.என். ராஜேஷ்குமார் உள்ளார்.



நாமக்கல்லில் சட்டமன்ற பொதுத்தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ள வருகை தந்த கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (16.4.2026) தமிழ்நாடு சவரத் தொழிலாளர் சங்க மாநில பொதுச் செயலாளர் டி.கே. ராஜா மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, தொழில் மற்றும் வர்த்தகத் துறையின் மேம்பாட்டிற்காக கழக அரசு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தியமைக்காக நன்றி தெரிவித்து, கழக கூட்டணிக்கு தங்கள் ஆதரவினை தெரிவித்தனர். உடன் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஆர்.என். ராஜேஷ்குமார் உள்ளார்.

# இந்தியா கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கு நன்றி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப்பதிவு!



**சென்னை, ஏப். 18–**

**நாடாளுமன்ற வாக்கெடுப்பில், தொகுதி மறுவரையறை சட்டமுன்வடிவைத் தோல்வியடையச் செய்ததைத் தொடர்ந்து, கழகத்தலைவரும்முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் இந்திய அளவிலான எதிர்க் கட்சித் தலைவர்களுக்கு நன்றி தெரிவித்து, சமூக வலைத்தளத்தில் வெளியிட்டுள்ள ஆங்கிலப் பதிவின் தமிழ் மொழியாக்கம் வருமாறு:**

**இந்தியா கூட்டணித் தலைவர்கள் அனைவருக்கும் நன்றி!**

பா.ஜ.க. அரசு எந்தக் கலந்தாலோசனையும் கருத்தொற்றுமையும் இல்லாமல் திணிக்கப் பார்த்த தொகுதி மறுவரையறை சட்டமுன்வடிவு தொடர்பான நம் கவலைகளை வெளிப்படுத்திப் பேசிய மாண்புமிகு மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் சகோதரர் ராகுல் காந்தி அவர்களுக்கு என் நன்றி.

மேலும், காங்கிரஸ் நாடாளுமன்றக் கட்சித் தலைவர் திருமதி. சோனியா காந்தி அம்மையார், காங்கிரஸ் கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன் கார்கே, சிபிஐ தேசிய பொதுச்செயலாளர் டி. ராஜா, தெலங்கானா மாநில முதலமைச்சர் ரேவந்த் ரெட்டி, கர்நாடக முதலமைச்சர் சித்தராமையா, மேற்கு வங்க முதலமைச்சர் செல்வி மமதா பேனர்ஜி, சமாஜ்வாதி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ், தேசியவாத காங்கிரஸ் கட்சித் தலைவர் சரத் பவார், ராஷ்டிரிய ஜனதா தளத் தலைவர் லாலு பிரசாத் யாதவ், ஜார்க்கண்ட் மாநில முதலமைச்சர் ஹேமந்த் சோரன், ஜம்மு காஷ்மீர் முதலமைச்சர் திரு. ஒமர் அப்துல்லா, ஆம் ஆத்மி கட்சித் தலைவர் அர்விந்த் கேஜ்ரிவால், சிவசேனா (UBT) தலைவர் உத்தவ் தாக்கரே, பிஜு ஜனதா தளத் தலைவர் நவீன் பட்நாயக், சிரோமணி அகாலி தளத் தலைவர் சுக்பிர் சிங் பாதல் உள்ளிட்ட அனைத்து எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும் எனது நன்றிகள்.

நம்மை வடக்கு – தெற்கு எனப் பிளவுபடுத்தி, பலவீனப்படுத்தி, இந்திய அரசியல் வரைபடத்தையே தங்களுக்குச் சாதகமான முறையில் மாற்றியமைக்கப் பார்த்தார்கள். ஆனால் இந்தியா ஒன்றுபட்டு நின்றது, பா.ஜ.க.வின் சூழ்ச்சியை வென்றது! இது தொடக்கம் மட்டுமே!

இனிவரும் நாட்களில் பா.ஜ.க. பெறும் அடி ஒவ்வொன்றும் இன்னும் பலமாக இருக்க வேண்டும். அதற்கு, எதிர்க்கட்சிகளான நாம் அனைவரும் இதே போல தொடர்ந்து ஓரணியில் நிற்க வேண்டும்!

இவ்வாறு முதல்வர் அவர்கள் சமூக வலைதளப்பதிவு குறிப்பிட்டுள்ளார்.





விழுப்புரம் மாவட்டம் செஞ்சி சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ.வை ஆதரித்து செஞ்சி விழுப்புரம் சாலையில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரத்தில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குச் சேகரித்தார். முன்னதாக விழுப்புரம் மாவட்டம் செஞ்சி சட்டமன்றத் தொகுதியில் தி.மு.க. சார்பில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. மேல்மலையனூர் மேற்கு ஒன்றியம் மேல்செவலாம்பாடியில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குச் சேகரித்தார். உடன் ஒன்றியச் செயலாளர்கள் நெடுஞ்செழியன், சாந்தி சுப்பிரமணியன், நாராயணமூர்த்தி ஆகியோர் உள்ளனர்.

### தி.மு.க. தலைமையிலான கூட்டணிக்கு

# தமிழ்நாடு அனைத்து கட்டிட - உடல் உழைப்புத் தொழிலாளர் சங்கங்களின் கூட்டமைப்பு ஆதரவு!

## மாநிலத் தலைவர் ஆர்.கே.சந்திரசேகரன் – பொதுச் செயலாளர் ஏ.டி.மோகன் அறிவிப்பு!

சென்னை, ஏப். 18 -

தமிழ்நாடு அனைத்து கட்டிட மற்றும் உடல் உழைப்பு தொழிலாளர் சங்கங்களின் கூட்டமைப்பு மாநிலத் தலைவர் ஆர்.கே.சந்திரசேகரன், பொதுச் செயலாளர் ஏ.டி.மோகன் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு கட்டிட மற்றும் உடல் உழைப்பு தொழிலாளர் சங்கங்களின் கூட்டமைப்பின் மாநில பொதுச் செயலாளர் ஏ.டி.மோகன் தலைமையில் மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள், கலந்து ஆலோசித்து தற்போது நடைபெற இருக்கின்ற 2026 சட்டமன்ற பொதுத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எங்களது கூட்டமைப்பு சங்கம் முழு ஆதரவை தருகிறது.

கழக வெற்றிக்காக எங்களது தொழிலாளர்கள் அயராது பாடுபடுவார்கள் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

# சைதை தொகுதியில் மா.சுப்பிரமணியன் வாக்கு சேகரிக்கிறார்!

*சென்னை, ஏப். 18-*

*மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் மா.சுப்பிரமணியன் இன்று (18426) சனிக்கிழமை காலை 7:00 மணிக்கு சைதை மேற்கு பகுதி 140வது வட்டத்தில் உள்ள கே. ஆர். கோயில் தெரு முழுவதும் உள்ள வீடுகள் தோறும் நடந்தே சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் கேட்டுபிரச்சாரம் செய்ய இருக்கிறார்.*

*எனவே இந்த வாக்கு சேகரிப்பு நிகழ்ச்சியில் சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கழக நிர்வாகிகள், தோழர்கள், தொண்டர்கள், மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளைச் சார்ந்த நிர்வாகிகளும் தொண்டர்களும் பங்கேற்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.*

*மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி*
*சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதி.*

### எஸ்.எச்.ரஹ்மத்துல்லாஹ் தலைமையில்

# 62 ‘அ’ வட்டத்தில் தீவிர வாக்கு சேகரிப்பு!

## எஸ்.மதன் மோகன் - பி.கே.பாபு பங்கேற்பு!

*சென்னை, ஏப்.18-*

*சேப்பாக்கம் தொகுதியில் 62 அ வட்டத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை ஆதரித்து சென்னை மேற்கு மாவட்ட சிறுபான்மை நல உரிமை பிரிவு அமைப்பாளர் எஸ்.எச். ரஹ்மத்துல்லாஹ் தலைமையில் பிரச்சாரம் செய்து வாக்கு சேகரித்தனர்.*

*சேப்பாக்கத்தில் வெற்றி வேட்பாளர் 62 அ வட்டத்தில் உதயநிதி ஸ்டாலின் அவர்களை ஆதரித்து சென்னை மேற்கு மாவட்ட சிறுபான்மை நல உரிமை பிரிவு அமைப்பாளர் எஸ் எஸ் ரஹ்மத்துல்லா தலைமையிலும் பகுதி செயலாளர் எஸ் மதன் மோகன், தொகுதி பொறுப்பாளர் பி.கே. பாபு முன்னிலையில் வீடு வீடாக சென்று வாக்குகள் சேகரித்தனர். இதில் மாவட்ட துணை அமைப்பாளர் சிறுபான்மையினர் பிரிவு எஃப் நசீர் ஏ அன்வர் பாஷா மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.*

# நிலக்கோட்டையில் எஸ்.நாகஜோதியை ஆதரித்து அமைச்சர் ஐ.பெரியசாமி வாக்கு சேகரிப்பு!

*திண்டுக்கல்,ஏப்.18-*

*நிலக்கோட்டை சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட இராஜதானிக்கோட்டை, விராலிப்பட்டி, பழைய வத்தலக்குண்டு, வத்தலக்குண்டு காளியம்மன் கோவில், எஸ். வாடிப்பட்டி, பட்டிவீரன் பட்டிக்கு வந்தபோது கிராம மக்கள் ஆரத்தி எடுத்து மலர் தூவி உற்சாக வரவேற்பு அளித்தனர். அப்போது பொதுமக்கள் மத்தியில் பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் கடந்த 5 ஆண்டுகளாக தமிழகத்தில் திராவிட மாடல் ஆட்சி நாயகர் கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் அமைந்த ஆட்சி பெண்களின் முன்னேற்றத்திற்காக ஆட்சியாக செயல்பட்டது. மகளிர் உரிமைத்தொகை, காக்கும் கரங்கள், புதுமைப்பெண் திட்டம், விடியல் பயணம், இல்லம் தேடி மருத்துவம், போன்ற திட்டங்களை செயல்படுத்தியதால் பெண்கள் போற்றும் ஆட்சியாக தமிழகத்தில் இன்றுவரை தி.மு.க. ஆட்சி உள்ளது. நிலக்கோட்டையில் மகளிருக்கான கலைக்கல்லூரி, விவசாயிகள் நலன் காக்க சிறுமலை நீர்த் தேக்கம், நிலக்கோட்டை மக்களுக்கு அணைப்பட்டி பேரணையிலிருந்து குடி தண்ணீர், மருதாநதியிலிருந்து சேவுகம் பட்டி குடி தண்ணீர் கொண்டுவந்தது, தி.மு.க. அரசு என்றார்.*

*இப்போது மகளிருக்கு தேர்தல் அறிக்கையில் ரூ. 8 ஆயிரத்திற்கான கூப்பன் வழங்கப்பட உள்ளது. ஏன் முதல்வர் மகளிரிடம் அந்த கூப்பன்களை வழங்க வேண்டுமென உத்திரவு போட்டிருக்கிறார் என்றால், மகளிர் தான் குடும்ப சூழ்ந்து உணர்ந்து சிக்கனமாக செலவு செய்வார்கள். தங்களுக்கு வேண்டிய வீட்டு உபயோகப் பொருட்களை மட்டும் வாங்குவார்கள் என்றார். அப்போது அங்கு கூடியிருந்து நூற்றுக் கணக்கான பெண்கள் மகிழ்ச்சியில் தை தட்டி தங்களது ஓட்டு உதயசூரியனுக்கே. மீண்டும் தமிழக முதல்வராக ஸ்டாலின் அண்ணன்தான் அவர்கள்தான் வருவார்கள் என்றார்கள். நான் எப்போது சொன்ன வார்த்தையை காப்பாற்ற வேண்டுமென்று உறுதியான மனநிலையில் இருப்பவன். உங்களுக்கு ஒன்றை மட்டும் சொல்கிறேன். நிலக்கோட்டை தொகுதியில் தி.மு.க.வேட்பாளர் எஸ்.நாகஜோதி அதிக ஓட்டு வித்தியாசத்தில் மாபெரும் வெற்றி பெற்று உங்களின் குறைகளை கேட்டறிந்து அதை நிவர்த்தி செய்வார்.*

### சட்டப்பேரவை பொதுத்தேர்தல் - 2026

# தொகுதிப் பார்வையாளர் நியமனம்!

**(12வது பட்டியல்)**

## தலைமைக் கழகம் அறிவிப்பு!

நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தல் பணிகளை ஒருங்கிணைக்கும் வகையில் முதற்கட்டமாக கீழ்க்கண்டவாறு சட்டமன்றத் தொகுதிகளின் பார்வையாளர்கள் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்படுகிறார்கள்.

கழக நிர்வாகிகள் மற்றும் தோழர்கள் முழு ஒத்துழைப்பு வழங்கிட வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| சட்டமன்றத் தொகுதி | பார்வையாளர் |
|---|---|
| அவினாசி | கார்த்திகேய சிவசேனாபதி |

**குறிப்பு : ஏற்கனவே தொகுதி பார்வையாளர்களாக நியமிக்கப் பட்டவர்களுடன் இவர்கள் இணைந்து பணியாற்றுவார்கள்.**

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 17.04.2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.



அண்ணா நகர் தொகுதி கழக வெற்றி வேட்பாளர் நே.சிற்றரசு, அண்ணா நகர் நடுவாங்கரை பகுதியில் பொது மக்களைச் சந்தித்து வாக்குகள் சேகரித்தார். அப்போது சென்னை மேற்கு மாவட்டக் கழக தகவல் தொழில்நுட்ப சமூக வலைதள ஒருங்கிணைப்பாளர் மு.வினோத் உள்ளிட்ட கழகத் தோழர்கள் வேட்பாளர் சிற்றரசுவுக்கு உதயசூரியன் பதித்த பட்டு சால்வை அணிவித்து வரவேற்றனர். அப்போது பகுதிச் செயலாளர் சு. பரமசிவம் உள்ளிட்ட கழக முன்னணியினர் உடன் வந்தனர்.



மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வெற்றி வேட்பாளர் மயிலை த.வேலுவை ஆதரித்து உதயசூரியனுக்கு வாக்கு சேகரிப்பு மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி, 123 அ வட்டச் செயலாளர் மு.ராஜேந்திரன், மாணவர் அணி மாவட்ட அமைப்பாளர் எஸ்.சரவணன் அறிவுறுத்தலின்படி மயிலை மேற்கு பகுதி தி.மு.க மாணவர் அணி சார்பில் நேற்று (17.04.2026) 123 அ வட்டம் முழுவதும் வீடு வீடாக சென்று பிரச்சாரம் நடைபெற்றது. இதில் மாணவர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் மயிலை தா.தாமு மற்றும் நந்தனம் மு.சதீஷ், மாணவர் அணி பகுதி துணை அமைப்பாளர்கள் வீரராகவன், மணிகண்டன், அருண்குமார், பாஸ்கர், மாணவர் அணி நிர்வாகி சரவணா ஆகியோர் மற்றும் கல்லூரி மாணவர்கள், மயிலை மேற்கு பகுதி மாணவர் அணி மற்றும் கழக செயல் வீரர்கள் அனைவரும் கலந்துகொண்டனர். மயிலை மேற்கு பகுதி மாணவரணி அமைப்பாளர் ஆர்.ராமு நன்றி கூறனார்.